பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 18 புதன்கிழமை 03.09.2025 கதிர் 297

## இது ரகசியம் அல்ல!

நேற்று சுன்னாகத்தில் உள்ள வலி. தெற்கு பிரதேச சபையில் அமரர் தர்மலிங்கத்தின் 40ஆவது நினைவு தினம் இடம்பெற்றது. தற்போதைய புளொட் தலைவரும் ஜனநாயகத் ☞ 2

## பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த மேலும் 7 பேரைத் தேடி வேட்டை

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் கைது செய்யப்பட்ட பாதாள உலகத் தலைவர்களான பாக்கோ சமந்தா மற்றும் தம்பாரி லஹிரு ஆகியோரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்றும், தெற்கில் பாதாள உலகத்துடன் தொடர்புடையவர்கள் என்றும் நம்பப்படும் ஏழு பேர் பற்றிய தகவல்கள் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று, இந்த ஏழு பேரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல்காரர்கள் என்று கூறப்படும் இவர்களைத் தேடி மித்தேனியா பகுதியில் உள்ள ஏழு வீடுகளில் பொலிஸார் திடீர் சோதனை நடத்தியுள்ளனர். ஆனால் தங்கள் மனைவி மற்றும் குழந்தைகளுடன் அவர்கள் தப்பியோடிவிட்டனர் என்றும் ☞ 6

## ஜெனிவாவில் படையினரை காட்டிக்கொடுக்கச் சதியாம்

### ஆளும்தரப்பு அனுமதிக்கக்கூடாது என்கிறார் குணவன்ச தேரர்

நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமை பேரவையின்போது நாட்டைப் பாதுகாத்த படையினரைக் காட்டிக்கொடுக்கும் சதித்திட்டம் ஒன்று இடம்பெறவுள்தாகவும் ஆளும்தரப்பு அதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்தார்.

இந்த மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடர் தொடர்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவா மனித உரிமை கூட்டத்தொடர் இந்த மாதம் இடம்பெற இருக்கிறது. மனித உரிமைகள் தொடர்பில் எமக்குக் ☞ 3

# ஒரு கட்சி ஆட்சியை நோக்கி நகர ஆளும்தரப்பு முயல்கிறது

### யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் குற்றச்சாட்டு
### தமிழ் அரசுக் கட்சி அனுமதிக்காது எனவும் தெரிவிப்பு





அநுரகுமார தலைமையிலான தற்போதைய ஆளும்தரப்பினர் நாட்டை ஒரு கட்சி ஆட்சியை நோக்கிய திசையில் கொண்டு செல்ல முனைகின்றார்கள். இது எமக்கு மிகவும் ஆபத்தானது. அமைச்சரவைத் தீர்மானங்கள் அமைச்சரவைக் கூட்டங்களிலேயே எடுக்கப்பட வேண்டுமே தவிர பெலவத்தையில் அல்ல. நாட்டின் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக அன்றி ☞ 2

## இலங்கையை ஐசிசிக்கு பரிந்துரைப்பதை ஐ.நாவின் தீர்மானத்தில் உள்ளடக்குங்கள்

### புலம்பெயர் அமைப்புக்கள் சில கடிதம்

செம்மணி மற்றும் சம்பூர் மனிதப்புதைகுழிகள் இனப்படுகொலை நோக்கத்திற்கான வலுவான ஆதாரங்களாக இருப்பதன் காரணத்தால், இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் (ஐ.சி.சி.) பரிந்துரைப்பதையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 6-0ஆவது அமர்வில் நிறைவேற்றவுள்ள தீர்மானத்தில் உள்ளடக்கவேண்டும் என்று உலக நாடுகள் பலவற்றில் இயங்கிவரும் 18 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கடிதம் எழுதியுள்ளன.

பிரித்தானியத் தமிழர் பேரவை, புதுடில்லி தமிழ்ச்சங்கம், ஜேர்மனி தமிழர் கொள்கைப் பேரவை, சுவிட்ஸர்லாந்து தமிழ் நடவடிக்கைக் குழு என்பன உள்ளடங்கலாக பிரிட்டன், பிரான்ஸ், இந்தியா, ஜேர்மனி, நெதர்லாந்து, கனடா, அயர்லாந்து, தென்னாபிரிக்கா, சுவிட்ஸர்லாந்து, மொரீஸியஸ் ஆகிய நாடுகளைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் 18 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டிணைந்து இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளன.

இணையனுசரணை நாடுகளின் பிரதிநிதிகள், பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகள், கொள்கைவகுப்பாளர்கள் உள்ளிட்ட ☞ 6

## செம்மணி – 222




செம்மணி - சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் நேற்று மேலும் 4 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதுவரை 222 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 206 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழிகளில் அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 41ஆவது நாளாக நேற்று யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதிவான் லெனின் குமார் முன்னிலையில் ☞ 3

## வெப்ப எச்சரிக்கை

நாட்டைப் பாதிக்கும் வெப்பமான வானிலை நிலமைகளை எதிர்கொள்வதில் வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் உள்ள மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

இந்த எச்சரிக்கை இன்று முதல் மூன்று நாட்களுக்கு அமலில் இருக்கும் என்று கூறும் திணைக்களம், வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை ☞ 3

## படையினரை வேட்டையாடுகிறதாம் அநுரகுமாரவின் ஆளும்தரப்பு

### வருத்தப்படுகிறார் நாமல்

வடக்கில் நினைவேந்தலுக்கு முழுமையாக அனுமதியளித்துவிட்டு படையினரை வேட்டையாடும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. முன்னாள் கடற்படைத்தளபதி நிஷாந்த உலுகேதென்னவின் நிலைமை வேறு இராணுவ அதிகாரிகளுக்கும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் எதிர்காலத்தில் ஏற்படலாம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கண்டி அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரை சந்தித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் ☞ 3

## பாவனையற்ற வாகனங்களுக்கும் காப்புறுதி செலுத்திய சமுர்த்தித் துறை

தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில், சமுர்த்தி அபிவிருத்தித் துறையில் இயங்கும் நிலையில் இல்லாத பதினைந்து வாகனங்களுக்குக் காப்பீட்டுப் பிரீமியங்கள் செலுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கொடுப்பனவுகள் 2022 / 2023 மற்றும் 2023 / 2024 ஆம் ஆண்டுகளுக்கானவை என்று கூறப்படுகிறது.

தேசிய தணிக்கை அலுவலகம் ☞ 2

### சீன அதிபர் முன்மொழிந்துள்ள

## உலகளாவிய ஆட்சியியல் திட்டத்தை ஆக்கபூர்வமாக இலங்கை அணுகும்

ஷங்காய் கூட்டுறவு அமைப்பின் 25ஆவது மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜின்பிங்கினால் முன்மொழியப்பட்ட உலகளாவிய ஆட்சியியல் செயற்திட்டத்தை ஆக்கபூர்வமான விதத்தில் தாம் அணுகுவார் என்று அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஷங்காய் கூட்டுறவு அமைப்பின் 25ஆவது அரச தலைவர்கள் மாநாடு ஓகஸ்ட் 31 தொடங்கி திங்கட்கிழமை வரை சீனாவின் தியான்ஜின் நகரில் நடைபெற்றது.

ஷங்காய் கூட்டுறவு அமைப்பின் கண்காணிப்பாளர் நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குகிறது. அதனடிப்படையில் இம்மாநாடு குறித்தும், மாநாட்டில் ☞ 3

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவருமான சித்தார்த்தனின் தந்தையே தர்மலிங்கம். தந்தை செல்வாவின் தீவிர விசுவாசியாக இருந்தவரான தர்மலிங்கம் கடைசி வரைக்கும் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவராகவே இருந்தார். அதனால் தமிழ் அரசுக் கட்சிக்காரர் என்று அறியப்பட்டார். வலிகாமம் வடக்கில் இன்றும் மூத்த வாக்காளர்களிடம் தர்மலிங்கத்தாரின் மகன் என்றே சித்தார்த்தன் அறியப்படுகின்றார். இரண்டு தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிட்டபோது சித்தார்த்தன் நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றிபெறுவதற்கு அந்தத் தமிழ் அரசுக் கட்சி ஆதரவு வாக்குகளே கணிசமான செல்வாக்கைச் செலுத்தின. தனித்துக் கேட்டபோது தோற்றுப்போனார். இருந்தாலும் சித்தார்த்தன் தமிழ் அரசுக் கட்சி ஆள் இல்லை என்பதைச் சரிவரக் கிரகித்துக் கொள்ளாமலேயே அவர் தர்மலிங்கத்தாரின் மகன் என்பதற்காகவே வாக்களிக்கும் மூத்த தமிழ் அரசுக் கட்சிக வாக்காளர்கள் இன்றும் இருக்கவே செய்கிறார்கள்.

இவ்வளவு விளக்கத்தையும் ஏன் சொல்கின்றேன் என்றால், அந்தளவிற்கு தர்மலிங்கத்தார் தமிழ் அரசுக் கட்சி ஆள் என்று ஊறிப்போனவர். ஆனால், அவரது மகனான சித்தார்த்தன் இன்று தமிழ் அரசுக் கட்சியை அழித்தொழிக்கும் நோக்கத்தோடு செயற்படும் தீய சக்திகளின் நெருங்கிய கூட்டாளி. அந்தக் கட்சியை அழித்தொழிக்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்குள்ளேயேகூட உண்டு. அதற்கான வெளிப்பாடுகளை கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போதான பரப்புரைகளில் அவர் பல இடங்களில் வெளிக்காட்டியிருப்பார். அதுமட்டமல்ல, தமிழ் அரசுக் கட்சியை வேரோடு அழித்தொழிப்பதில் கங்கணம் கட்டிச்செயற்படும் தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையோடுதான் புளொட்டும் அது இடம்பெற்றுள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணியும்பங்காளி. கையெழுத்துப் போட்டுஒப்பந்தம்செய்துகொண்ட கொள்கைப் பங்காளிகள்.

வேடிக்கை என்னவென்றால் தர்மலிங்கத்தின் நினைவேந்தலில் இந்தக் கொள்கைப் பங்காளிகளில் ஒரு கட்சியின் தலைவரைக்கூ-டக்காணக்கிடைக்கவில்லை. ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் முக்கிய தலைவர்களையும்கூடக் காணவில்லை. அவர்களுக்கெல்லாம் தர்மலிங்கத்தார் தமிழ் அரசுக் கட்சி ஆள் என்பது நன்கு உறைத்துள்ளதுபோலும், அதனால்நிகழ்விற்கு வரவில்லை. தமது பங்காளி, அரசியல் கூட்டாளி, இணைத் தலைவர் ஒருவரின் அப்பாவின் நினைவுதினத்திற்குக்கூட, அவர் வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தால் பங்கேற்கக்கூடாது என்ற "அரசியல் அறிவு (?)" அவர்களுக்குச் சிறப்பாக இருந்திருக்கிறது போலும். அதனால் அவர் பங்கேற்கவில்லை. ஆனால் அந்த "அரசியல் அறிவு?" இல்லாத காரணத்தால் சுமந்திரன் நிகழ்வில் முதன்மை உரையை ஆற்றியிருக்கிறார். தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார். தான் தலைவரானதும் பழையபடி கூட்டமைப்பாகச் செயற்படலாம் அல்லது உள்ளூராட்சி சபைகளின் தேர்தலையொட்டியாவது பழைய கூட்டமைப்பாகச் செயற்படலாம் என்று சித்தார்த்தனை அவரது வீடு தேடிச் சென்று சந்தித்துக் கேட்டபோதும், அவருக்குச் சிரித்துச் சிரித்துத் தலையாட்டிவிட்டு சில நாள்களிலேயே காங்கிரஸுடன் கொள்கைக் கூட்டில் கையெழுத்திட்-டு ஊடகங்களின் முன் சித்தார்த்தன் சிரித்து அவரது முதுகில் குத்திய காயம் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானத்திற்கும் ஆறிவிட்டது போலும் அதனால் அவரும் நிகழ்வு மேடையில் முதல் வரிசையில் அமர்ந்திருந்தார்.

இந்த நிகழ்வை சுமந்திரன் நன்கு பயன்படுத்திக்கொண்டார். 2016 முதல் 2019 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற புதிய அரசமைப்பு முயற்சிகள், தர்மலிங்கத்தார் 1970களில் அரசமைப்பு நிர்ணய சபையில் முன்வைத்த, அதாவது சிறிமாவோ பண்டாரநாயக்கவால் கொண்டுவரப்பட்ட 1972 அரசமைப்புக்கானவரைவைத்தயாரித்த சபையில் முன்வைத்த கொள்கைகளின் அடிப்படையிலேயே தொடர்ந்து இடம்பெற்று வருதாக தனது பேச்சில் தெளிவுபடுத்தினார் சுமந்திரன். அதுவும் இலங்கையின் அரசமைப்பு ஒற்றையாட்சியா இல்லையா என்ற சர்ச்சை, அதாவது ஏக்கிய ராஜ்ய சர்ச்சை மற்றும் சமஷ்டிதான் தமிழ் அரசுக் கட்சியின் நோக்கம் என்றாலும் பெயரில் தொங்குவதைவிட உள்ளடக்கத்தில் அக்கறை கொள்வது கட்சியின் கொள்கை என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

அப்படி அவர் சித்தார்த்தனின் முன்பாக இந்த விடயங்களை அழுத்திச்சொன்னதற்குக் காரணமும் உண்டு. மைத்திரி - ரணில் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அந்த அரசமைப்பு முயற்சியின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக சித்தார்த்தனும் சுமந்திரனும்ஒரே அணியிலேயே இருந்தனர். ஆனால் சுமந்திரனே அரசமைப்புப் பணியில் தீவிரமாகவும் முழுவதுமாகவும் ஈடுபட்டு வந்தார். அதன் காரணமாக அவர் அரசியலில் முதன்மை பெற்று வந்ததுடன் அவரது புகழும் ஓங்கி வந்தது. அதனால் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் அவர் மீது அதீத பொறமை கொண்டிருந்த காலம் அது. அந்தச் சமயத்தில் புதிய அரசமைப்பு முயற்சிகள் குறித்த உள்வீட்டுத் தகவல்களை செய்தியாளர்களிடம்கசியவிட்டுசம்பந்தருக்கும் சுமந்திரனுக்கும்நெருக்கடியைஏற்படுத்துவதில் சித்தார்த்தனுக்கும் கணிசமான பங்கு இ-ருந்தது. அதுமட்டுமல்ல அந்த அரசமைப்பு வரைவை முன்வைத்து அநுரகுமார தலைமையிலான என்.பி.பி. ஆளும்தரப்பு தனது புதிய அரசமைப்பு முயற்சிகளை முன்னெடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் காங்கிரஸுடன் அதற்கிணங்கி கொள்கை ஒப்பந்தமும் செய்துகொண்டுள்ளவர்தான் சித்தார்த்தன். அதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான், நான் செய்ததில்

## ஒரு கட்சி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில்வின் சில்வா அல்ல. ஒரு கட்சி ஆட்சியை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் நினைவு நிகழ்வில் நேற்று உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். இந்த 40ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்றலில் பிற்பகல் நடைபெற்றது.

வலி. தெற்குபிரதேசசபைமுன்றலில்உள்ள அமரர் தர்மலிங்கத்தின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அங்கு நினைவுரையாற்றிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

தர்மலிங்கம் அவர்கள் பொது வாழ்க்கைக்குள் நுழைந்தது 1944 ஆம் ஆண்டு. ஆரம்பத்தில் இப்பிரதேசத்தின் உள்ளூராட்சி சபை அங்கத்தினராக தெரிவாகி பின்னர் இச்சபையின் தலைவராகவும் கடமையாற்றினார் 1952ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத்தமிழ்அரசுக்கட்சிசார்பாகஉடுவில் தொகுதியில்போட்டியிட்டு1960 மார்ச்தேர்தலில் முதலில் வெற்றி பெற்றார். அதன் பின் சகல தேர்தல்களிலும் வெற்றி பெற்று 1977ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் மீள் நிர்ணயம் செய்யப்பட்ட, மானிப்பாய் என்று பெயரிடப்பட்ட தொகுதியில் வெற்றிபெற்றார். 1960 இலிருந்துநாடாளுமன்ற உறுப்பினராக செயலாற்றி 1983 ஆம் ஆண்டு பிரிவினைக்கெதிராகச் சத்தியபிரமாணம் எடுக்காத காரணத்தால், பாராளுமன்ற உறுப்பினர். பதவி பறிபோகும்வரை உடுவில்/மானிப்பாய்தொகுதியின்பிரதிநிதியாக இருந்திருக்கின்றார்.

தர்மலிங்கத்தின் அரசியல் வாழ்க்கையில் மிக முக்கியமான அம்சம், தந்தை செல்வா சார்பில் அரசியல் நிர்ணய சபையில், அவர் முன்மொழிந்த பிரேரணைகள் ஆகும். 1971 ஆம் ஆண்டு மார்ச் 16 உரையாற்றுகிறபோது 'எனது தலைவர் செல்வநாயகம் அவர்களின் பெயரின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்ற அடிப்படை தீர்மானம் 2 இற்கான திருத்தத்தை பிரேரிக்கும் பொறுப்பை எனது கட்சி எனக்குக் கொடுத்திருப்பத்தை பெரும் பாக்கியமாக கருதுகிறேன்' என்று ஆரம்பித்து ஆங்கிலத்திலே ஏறத்தாழ இரண்டு மணி நேரம் உரையாற்றியிருந்தார்.

அதற்கு முன்னர் தமிழிலே சில வார்த்தைகளைக் கூறி அந்தப் பேச்சை ஆங்கிலத்திலே செய்யவேண்டுமென்று தனது கட்சி தனக்கு உத்தரவிட்டதை பதிவுசெய்திருக்கிறார். அதன் காரணம் மொழிபெயர்ப்பாளர்களிலே தமக்கு நம்பிக்கை இல்லை என்பதால் அல்ல மாறாக, அமைச்சரவர்கள் (கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா) சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக பல ஆண்டுகளாக போராடிய ஒரு பெரியார் என்பதை மனதிற்கொண்டு தமது கருத்தை அவருக்கு நேரடியாக தெரிவிக்க வேண்டுமென்பதற்காகவே ஆங்கிலத்தில் உரையாற்றுகிறார் என்று கூறினார்.

முதலாவது குடியரசு யாப்பொன்றை வரைவதற்காக 1970 இலிருந்து, 1971 இறுதி வரை கொழும்பு, நவரங்கஹல மண்டபத்தில் அரசியல் நிர்ணய சபை கூடியபோது ஜூலை 1971வரை இலங்கை தமிழ்அரசுக்கட்சி அதிலே பங்குபற்றியிருந்தது. அங்கே, இலங்கைக்கான மாதிரி அரசமைப்பொன்றை சமர்ப்பித்தது மட்டுமல்லாமல், அதையொட்டி அடிப்படை பிரேரணைகளுக்கு திருத்த பிரேரணைகளை முன்மொழிந்தவர் திரு. தர்மலிங்கம் அவர்கள். இறுதியாக, 'குறைந்தது உங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி கச்சேரிகளை மக்களால் தெரிவுசெய்யப்படும் நிறுவனங்கள் ஆக்குங்கள்' என்ற முன்மொழிவும் 88-13 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது. அதன் பின்னர் தான் தந்தை செல்வா எழுந்து எமது ஆகக் குறைந்த கோரிக்கைகளைக்கூட நீங்கள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் இந்த சபையில் நாம் தொடர்ந்து பங்கேற்பது அர்த்தமற்றது; ஆகையால் நாளையிலிருந்து நாம் வரமாட்டோம் என்று அறிவித்தார். அதன் பின்னர்தான்தந்தைசெல்வாவின் இராஜினாமா, காங்கேசன்துறை இடைத்தேர்தல், 1974 இல் உருவாக்கப்பட்ட தமிழர் கூட்டணி, 1976 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியாக பரிணாமம் பெற்று வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 1977 ஜூலை பொதுத் தேர்தலில், தனிநாட்டுக்கான மக்கள் ஆணையை தமிழ் மக்கள் வழங்கினார்கள். ஆகவேதனிநாட்டைதவிரவேறுவழி இல்லை என்ற தீர்மானத்திற்கு இட்டுச்சென்ற பாதை, அரசியல்நிர்ணயசபையில்திரு. தர்மலிங்கத்தின் பிரேரணைகள் பெரும்பான்மை வாக்குகளால் நிராகரிக்கப்பட்டதிலிருந்துதான் ஆரம்பித்தது.

ஆகவே, சமஷ்டி அடிப்படையிலான புதிய அரசமைப்பை நாம் கோரியிருக்கின்ற இந்த வேளையில் 55 வருடங்களுக்கு முன்னர் தர்மலிங்கம் அரசியல் நிர்ணய சபையில், முன்வைத்த பிரேரணைகளை ஆராய்வது பொருத்தமானதாக இருக்கும் என நினைக்கிறேன்.

அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்ட முதலாவது அடிப்படைத் தீர்மானம், நாட்டின் பெயர், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என்பதாகும். இது சம்பந்தமாக வாத விவாதங்கள் நடைபெற்றாலும், இறுதியில் இ. த. அ. கட்சி அதற்கு சார்பாக வாக்களித்தது. அடுத்த நாள் தந்தை செல்வா அதற்கான காரணத்தை விளக்கிக்கூறினார். நாமும்ஜனநாயகத்தையும் சோசலிசத்தையும் ஏற்றுக் கொள்வதால் அப்படி வாக்களித்தோம், ஆனால் சோசலிசம் என்ற பெயரில் கம்யுனிசத்தையும் ஒரு கட்சி ஆட்சியையும் நிறுவ முயல்வதை நாம் எதிர்க்கிறோம் என்று கூறினார். இன்றைய நிலைமைக்குமிகப்பொருத்தமானதுஎன்பதால் இதை இங்கு குறிப்பிடுகிறேன்.

இ. த. அ. கட்சிசோசலிசத்தத்துவத்தைஎமது மூலக் கோட்பாடாக கொண்ட கட்சி. அதிலும் அமரர் தர்மலிங்கம் ஒரு இடதுசாரியாகவே அறியப்பட்டவர். ஆனால், பொதுவுடமையை நாம் ஏற்றுக்கொண்டாலும், அதன் பெயரில் ஜனநாயகம் அழிக்கப்படுவதை எதிர்ப்போம். எமது நாடு பன்மைத்துவமானது. ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்களை தன்னகத்தே கொண்டது என்பதை வலியுறுத்துகிற நாம், பல கட்சி ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிடில் எமது அரசியல் இருப்பு கேள்விக் குறியாகும். ஒரு கட்சி ஆட்சியை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது. தற்போதைய ஆட்சியாளர்கள் அப்படியான திசையில் நாட்டைக் கொண்டு செல்ல முனைகிறார்கள். இது எமக்கு மிகவும் ஆபத்தானது. அமைச்சரவைத் தீர்மானங்கள் அமைச்சரவைக்கூட்டங்களிலேயேஎடுக்கப்பட வேண்டுமே தவிர பெலவத்தையில் அல்ல. நாட்டின் அரசுத் தலைவர் அநுரகுமாரவே அன்றி டில்வின் சில்வா அல்ல.

இரண்டாவது அடிப்படைத் தீர்மானம் இலங்கைஓர்ஒற்றையாட்சிஅரசு என்பதாகும். இதிலேதான் தர்மலிங்கம், அது சமஷ்டிஅரசாக இருக்க வேண்டும் என்ற திருத்தத்தைப் பிரேரித்து மிக நீண்ட உரையொன்றை ஆற்றினார். இது வரலாற்றுச் சிறப்பு மிக்க உரை. அதிலே சோவியத் ரஷ்யா, யூகோஸ்லாவாக்கியாமற்றையபொதுவுடமை நாடுகளில் காணப்படும் இணைப்பாட்சி, சுவிஸ்லாந்தின் கூட்டாட்சி போன்ற முன் மாதிரிகளை விளக்கிக் காண்பித்தார். லெனின் எப்படியாக தேசங்களின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தினார் என்பதை எடுத்துச்சொன்னார். அன்றைய அரசுசுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிகளான சமசமாஜக் கட்சி, கம்யுனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் கூட்டாக இருந்ததால் அவர்களுடைய தத்துவங்களையே உபயோகித்தார். இதுவும் இன்றைய ஆட்சியாளர்களுக்கும்பொருந்தும். 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஜே. வி. பி. சார்பாகப் போட்டியிட்டவர்களில், அதன ஸ்தாபகத் தலைவர் ரோகண விஜேவீர, தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என்று கூறிப் போட்டியிட்டவர்.

மேற்சொன்னஅடிப்படைத்தீர்மானங்களில் நாட்டின் பெயர் ஜனநாயக சோஷலிச குடியரசு என்றும், பிறிதாக, அரசு, ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டியா என்ற விவாதத்தையும் கொண்டிருந்தது. நாடு ஒரு நாடாக இருப்பதை இ. த. அ. கட்சி எதிர்க்கவில்லை. ஸ்ரீ லங்கா என்ற சொல் தமிழில் இலங்கை என்று மாற்றப்படவேண்டும் என்று மட்டும் கேட்டிருந்தார்கள். ஆனால் அரசைப் பொறுத்தவரையில் அது ஒற்றையாட்சியாக இருக்க முடியாது, சமஷ்டியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

2016-19வரையானஅரசமைப்புஉருவாக்க முயற்சிகளிலும் இதே அணுகுமுறைதான் கையாளப்பட்டது. அரசைக்குறித்துச்சொல்லுகிற ஒற்றையாட்சி என்கிற பதம் நீக்கப்பட்டுநாட்டை குறித்துச் சொல்லுகிற ஒருமித்த நாடு என்ற சொற்பதம் உபயோகிக்கப்பட்டது. சிங்கள மொழியிலும் அதே அணுகுமுறையே கையாளப்பட்டது. தமிழில்ஒன்றும்சிங்களத்தில் வேறொன்றுமாக இருப்பதாக செய்யப்பட்ட, தற்போதும் செய்யப்படுகின்ற பிரச்சாரம் முற்று முழுக்க பொய்யானது. தற்போதுள்ள அரசமைப்பின் அரசைக் குறிக்கிறதான ஏகீய ரஜய என்ற சொற்பதம் தவிர்க்கப்பட்டு நாட்டைக் குறிக்கிறதான ஏகீய ராஜ்ய என்ற சொற்பதம் உபயோகிக்கப்பட்டது. தமிழிலே செய்யப்பட்டதே சிங்களத்திலும் செய்யப்பட்டது. சிங்களத்தில் 'ரஜய' என்றால் 'ஆட்சி' ; 'ராஜ்ய' என்றால் 'நாடு'.

'ஒற்றையாட்சி' என்ற சொல்லுக்குப் பதிலாக 'சமஷ்டி' என்ற சொல் பிரதியீடு செய்யப்படவேண்டும் என்ற திருத்தப் பிரேரணையை தர்மலிங்கம் முன்வைத்திருந்தாலும்கூட, தனது பேச்சின் இறுதியில் 'சமஷ்டி' என்ற சொல்லை உபயோகிப்பதில் ஆளும்தரப்பிற்குப் பிரச்சினை இருக்குமாக இருந்தால் நான் முன்னர் குறிப்பிட்டதுபோல, அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி கச்சேரிகளை இல்லாமலாக்கி மாவட்ட சபைகளை நிறுவுமாறு கேட்டுக்கொண்டார். தேர்தல் காலத்தில் ஆளும்தரப்பில் உள்ள கட்சிகள் வெளிப்படையாகவே சமஷ்டிக்கெதிராகப் பரப்புரை செய்து மக்களாணையைப் பெற்றிருந்தமையே இந்த விட்டுக்கொடுப்புக்கு காரணமாகவும் அவர் விளக்கியிருந்தார்.

சமஷ்டிஆட்சிமுறையேசமஷ்டிக்கட்சியின், இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின், அடிப்படைக் கொள்கை, கோட்பாடுஎல்லாமே. ஆனால்பெயர் பலகைகளில் தொங்கிக் கொண்டிருக்காமல் யாப்பின் உள்ளடக்கத்திலே அது அமைய வேண்டும் என்பதையே பண்டா-செல்வா ஒப்பந்தம் மற்றும் டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பன சுட்டி நிற்கின்றன. 1971ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் இ. த. அ. கட்சி முன்வைத்தமாதிரி அரசமைப்பும், தர்மலிங்கம் முன்மொழிந்த இரண்டாம் அடிப்படைத் தீர்மானத்திற்கான திருத்தமும், 'சமஷ்டி' என்ற சொல்லைக் கொண்டியிருந்தாலும், உள்ளடக்கம்சமஷ்டிஅடிப்படையில் இருப்பதே முக்கியமானதென்ற தந்தை செல்வாவின் அணுகுமுறையையே தர்மலிங்கமும் கடைபிடித்தார். அதையே இ.த.அ கட்சியும் தொடர்ந்தும் கடைபிடிக்கும்.

இ. த. அ. கட்சி அன்றுமுன்மொழிந்தமாதிரி அரசமைப்பு இன்றைக்கும் பொருத்தமானது என்பது எனது கருத்து. அந்த மாதிரி அரசமைப்பின் சில கூறுகளை திரும்பவும் ஆராய்வது நல்லது. குறிப்பாக, அரசியற் கட்டமைப்பு, ஐந்து மாநிலங்களாகவும், தலை நகரம் மத்திய அரசின் கீழ் வருவதாகவும் செய்யப்பட்ட முன்மொழிவு. அந்த ஐந்து மாநிலங்களாவன :

1. தெற்கு, மேற்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
2. வடமத்திய, வடமேல் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
3. மத்திய பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
4. வட, வட கிழக்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
5. தென்கிழக்குபிரதேசங்களைக்கொண்ட

தொடர்ச்சி 6ம் பக்கம்...

## உலகளாவிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீன ஜனாதிபதி சி ஜின்பிங் ஆற்றிய உரை குறித்தும் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அமைச்சர் விஜித்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

அப்பதிவில், ‘‘இறையாண்மைசார் சமத்துவம்,சட்டத்தின்ஆட்சி,பல்லினத்தன்மை, மக்கள்மைய அபிவிருத்தி, செயல் அடிப்படையிலான ஒத்துழைப்பு என்பவற்றை பிரதான கோட்பாடுகளாகக்கொண்டு உருவாக்கப்பட்ட ஷங்காய் கூட்டுறவு அமைப்பின் தியான்ஜின் நகரில் நடைபெற்ற மாநாட்டில்சீனஅரசுத்தலைவர்ஜின்பிங்கினால் முன்மொழியப்பட்டஉலகளாவியஆட்சியியல் செயற்திட்டத்தையும், அங்கு ஆராயப்பட்ட உலகளாவிய அபிவிருத்தி, பாதுகாப்பு, மக்கள் மயமாக்கல் செயற்திட்டங்கள் உள்ளிட்ட விடயங்களையும் நான் மிகவும் ஆக்கபூர்வமானவையாகக் கருதுகிறேன்“ எனத் தெரிவித்துள்ளார்.

## ஜெனிவாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்றுக்கொடுப்பதற்கு வெள்-ளையர்களுகு முடியுமா என்ற கேள்வி எமக்கு இருக்கிறது. நாங்கள் கால்நடைகளின் உரிமைகளைக்கூட பாதுகாக்க நடவடிக்கை எடுத்த ஓர் இனமாகும். அவ்வாறு இருக்கையில் மனித உரிமை தொடர்பில் எங்களுக்கு ஆலாசனை வழங்க வெள்ளைக்கார்களால் முடியுமா?

எமதுநாட்டைபயங்கரவாதப்போரிலிருந்து மீட்ட படையினரைக் காட்டிக்கொடுக்கும் சதித்திட்டம் ஒன்றை வெள்ளையர்கள் மேற்கொண்டுவருகிறார்கள் என்பதை எங்களால் அறிய -முடிந்தது.

இந்த ஆளும்தரப்பின் கீழ் இருக்கும் பெரும்பான்மையானவர்கள், எம்முடன் இணைந்து, நாட்டுக்காக நாட்டுப்பற்றுடன் செயற்பட்டவர்கள். அதனால் நாட்டை மீட்ட படையினருக்கு நாங்கள் தெரிவித்த விடயங்கள் என்ன என்பதை இந்த ஆளும்தரப்பில் இருப்பவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். அதனால் ஜெனிவா மனித உரிமை கூட்டத்தொடரில் எமது படையினரைக் காட்டிக்கொடுக்கும் எந்த விடயங்களுக்கும் ஆளும்தரப்பு துணைபோகக்கூடாது என்றார்.

## படையினரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆளும்தரப்பு போரை முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தினரைப் பழிவாங்கும் வகையில் செயற்படுகிறது. புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருத்திப்படுத்துவதற்காக இராணுவத்தினர் வேட்டையாடப்படுகிறார்கள்.

இராணுவத்தினரை பாதுகாக்கும் எமது செயற்பாட்டுக்கு மகாநாயக்க தேரர்களின் ஒத்துழைப்பை முழுமையாக எதிர்பார்க்கிறோம். ஏனெனில் ஆளும்தரப்பை நல்வழிப்படுத்தும் பொறுப்பு மகாநாயக்க தேரர்களுக்கு உண்டு.

முன்னாள் கடற்படைத்தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டுள்ளார். இவருக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமை ஏனைய இராணுவ அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிர்காலத்தில் ஏற்படலாம்.

இராணுவத்தினரைநெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகள்தற்போதுதீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வடக்கில் நினைவேந்தலுக்கு முழுமையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்குஎதிராகஎவ்விதநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றார்.

## வெப்ப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும்அம்பாந்தோட்டைமாவட்டங்களிலும் வெப்பக் குறியீடு, அதாவது மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை, ‘எச்சரிக்கை‘ மட்டத்தில்இருக்கக்கூடும்என்றும்கூறுகிறது.

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றன. இதுவரையில் இந்தப் புதைகுழிகளைத் தோண்டும் பணிகள் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்களில் 50 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# பதவி வெற்றிடம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

# துணைவேந்தர் பதவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரி அழைப்பு விடுக்கின்றது. பதவிக்கான தெரிவு 03/ 2023 இலக்க 10.04.2023 திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள முறையில் இடம்பெறும் என விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளவர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்தின் https://www.ugc.ac.lk/attachments/2442_Commission%20Circular%20No.%2003-2023.pdf. இணைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும் 63 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் வரைக்கும் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி மற்றும் புதுமை, புலமைப்பரிசில் மற்றும் சமூக ஈடுபாடு புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தரநிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் ஒன்பது பீடங்களையும் கிளிநொச்சியில் மூன்று பீடங்களையும் (எல்லாமாக 12 பீடங்களை) கொண்டமைந்து ஏறத்தாழ பதின்நான்காயிரத்து முந்நூறு பட்டதாரி மாணவர்களையும் ஆயிரத்து முந்நூறு உயர் பட்டதாரி மாணவர்களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித் துணை புரியமாறு எதிர் பார்க்கப்படுகிறார்.

1. துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழகத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங் காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளடங்கலாக அவரது தலைமைத்துவம் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்களைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற்திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல், ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்இ பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக் கொண்ட காரியத்தின் தன்மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

2. விண்ணப்பங்கள் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.

1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.
2. விண்ணப்பதாரி பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.
3. தற்போது இப் பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி எனின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர் காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையிலான அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரி அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள்இ நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள் “பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்” என முகவரியிட்டு மூடிய கடித உறையில் **15.10.2025 அன்று பி.ப 3.00 மணிக்கு** முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘துணைவேந்தர் பதவி’ எனக் குறித்திருக்க வேண்டும்.

மேலதிகமாக, மேலே உள்ள ஆவணங்கள் மற்றும் கையடக்க ஆவண வடிவமைப்பு (PDF) வடிவத்தில் உள்ள வேறு ஏதேனும் துணை ஆவணங்களின் மென்பிரதி எனது மின்னஞ்சல் முகவரி: சநபளைவசயசளூரனைை.தகெ.யஉ.டம இற்கு 15.10.2025 அன்று முடிவடைவதற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 03/2023 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, விண்ணப்பங்கள் முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டிற்காக மற்றும் நேர்காணலுக்காக பேரவைச் செயலாளரினால் சிறப்பு பேரவைக் கூட்டம் வேலை நாள் ஒன்றில் கூட்டப்படும். ஒரு விதிவிலக்கான சூழ்நிலையில், எந்தவொரு விண்ணப்பதாரரும் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு நேரில் தோன்ற முடியாத நிலையில், செயலாளரிற்குத் தரும் முன்னறிவித்தல் மூலம் நிகழ்நிலையில் (virtual mode) தோன்ற அனுமதிக்கப்படுவார்.

ஒரு சுருக்கமான 10 நிமிடங்களுக்குக் குறையாததும் 15 நிமிடங்களுக்கு மேற்படாததுமான விளக்கக் காட்சியை நிகழ்த்துவதற்கு விண்ணப்பதாரர்கள் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு முன் அழைக்கப்படுவார்கள். ஆயினும் எந்தவொரு வேட்பாளரும் அவ்வேட்பாளர் பேரவை உறுப்பினராய் இருந்தாலும் கூட வேறொரு வேட்பாளரின் விளக்கக்காட்சியின் போது பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

விசேட பேரவைக் கூட்டத்தின் அறிக்கையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 03/2023 இன் படி மூன்று பெயர்களை விதந்துரைக்கும்படி தயார்செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களுடனும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.

**முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படா.**

விசுவநாதன் காண்டீபன்
பதிவாளரும் பேரவையின் செயலாளரும்
பதிவாளர் அலுவலகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
01.09.2025

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏன் இந்தப் புறக்கணிப்பு?

**யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி என்பது வடக்கு மக்களின் நினைவகத்தின் ஒரு உயிரான சின்னமாக உள்ளது. போரின் இருண்ட காலத்தில் உயிரிழந்த பொதுமக்களின் கதைகளையும், அடக்கம் கூட பெறாமல் மறைந்துபோனவர்களின் துயரத்தையும் சாட்சியமாக்கும் தளமாகவே செம்மணி கருதப்படுகிறது. கடந்த காலத்தில் அங்கு கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள், உடைகள், குழந்தைகளின் எச்சங்கள்–இவை அனைத்தும் போர் நிகழ்த்திய கொடூரத்தைக் கண்ணுக்குத் தெரியுமாறு காட்டுகின்றன. எனவே செம்மணி என்பது ஒரு புவியியல் இடம் மட்டுமல்ல; அது தமிழ் மக்களின் நீதி தேடும் போராட்டத்தின் முக்கிய அடையாளமாகவே விளங்குகிறது.**

**அந்த செம்மணியை அரசுத் தலைவர் அநுரகுமார தனது யாழ்ப்பாண வருகையின்போது பார்வையிடுவார் என்ற நம்பிக்கையை கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் மக்களிடையே விதைத்திருந்தார். 'அரசுத் தலைவர் அங்கு சென்று பார்வையிடுவார்; குடும்பங்களின் துயரை நேரடியாகக் கேட்பார்' என்ற அவரது உரை மக்களிடையே சிறு நம்பிக்கை ஏற்படுத்தியது. ஆனால், அரசுத் தலைவர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்த போதும், செம்மணி பாதையூடாகச் சென்று கொண்டிருந்த போதும், அந்தச் சிறு தூரம் திரும்பி சென்று புதைகுழிகளை பார்வையிடத் தயங்கியதுதான் மக்கள் மனதை மிகவும் காயப்படுத்தியது.**

**மக்கள் ஆழ்ந்த ஏமாற்றத்திற்குள்ளாகியுள்ளனர். ஏனெனில், செம்மணி புதைகுழிகளைப் பார்வையிடுவது என்பது ஒரு சாதாரண நிகழ்ச்சி அல்ல. அது அரசாங்கம் தமிழ் மக்களின் துயரத்தை உணர்கிறது என்ற குறியீடாக இருந்திருக்கும். அது ஒரு அரசியல் நடவடிக்கை அல்ல; ஒரு மனிதாபிமானச் செயல். 'போரின் கொடுமைகளை மறக்கவில்லை; பாதிக்கப்பட்ட மக்களின் துயரத்தில் பங்கெடுக்கிறேன்' என்று அரசுத் தலைவர் அறிவிக்கும் வாய்ப்பாக இருந்தது. அந்த வாய்ப்பு தவறவிடப்பட்டது.**

**யாழ்ப்பாணப் பயணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. சாலைகள், கல்விக் கட்டிடங்கள், குடிநீர் திட்டங்கள் அனைத்தும் நிச்சயமாக மக்களின் வாழ்வில் நன்மை செய்யும். ஆனால், மக்களின் உள்ளத்தில் அடங்கியிருக்கும் நீதி ஏக்கம், காணாமல் போன உறவினர்களின் துயரம், அடக்கம் பெறாத எலும்புகளின் வலி–இவற்றை புறக்கணித்தால் அபிவிருத்தித் திட்டங்கள் முழுமையான அர்த்தம் தராது.**

**செம்மணி புதைகுழிகள் பற்றி அரசுத் தலைவர் மௌனம் காக்கும்போது, மக்களின் சந்தேகம் அதிகரிக்கிறது. 'தமிழர் துயரத்தை அரசாங்கம் இன்னும் கவனிக்கவில்லை' என்ற நம்பிக்கை வேரூன்றி விடுகிறது. பல வருடங்களாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் நீதியை நாடிக் குரல் கொடுத்து வருகின்றனர். அவர்கள் பிள்ளைகள், கணவர்கள், மனைவிகள் எங்கே என்று கேட்கின்றனர். இந்தக் கேள்விக்கு ஒரு நாள் கூட விடை கிடைக்கவில்லை. புதைகுழிகள் அந்த விடையின்மையின் சின்னமாகவே நிற்கின்றன.**

**அரசுத் தலைவர் அநுரகுமார தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் துயரத்தை புரிந்துகொள்வதாகவும், உண்மையை வெளிப்படுத்துவதாகவும், பரிகார நீதி அளிப்பதாகவும் உறுதியளித்திருந்தார். ஆனால், நடைமுறையில் அவர் இந்த நுட்பமான விஷயங்களைத் தவிர்த்துச் செல்லும் நிலைமை மக்களுக்கு ஆழ்ந்த விரக்தியைத் தருகிறது. யாழ்ப்பாணம் வந்தபோது அங்குள்ள மக்களோடு நேரடியாக சந்தித்து உரையாடுவது மட்டுமல்லாமல், செம்மணி புதைகுழிகளைப் பார்வையிட்டிருந்தால் அது மக்கள் மனதில் பெரும் நம்பிக்கையை விதைத்திருக்கும். அந்த நம்பிக்கை வாய்ப்பு பறிபோனது மிகுந்த வருத்தகரமானது.**

**ஒரு அரசுத் தலைவர் செம்மணியைப் பார்வையிடுவதில் அச்சப்பட வேண்டியதில்லை. அது யாருக்கும் எதிரான செயல் அல்ல. அது நீதி வேண்டிய ஒரு மக்களின் உணர்வில் பங்கெடுக்கும் செயல். கடந்த காலத்தில் பல சர்வதேச தூதுவர்கள், மனித உரிமை அமைப்புகள், ஆய்வாளர்கள் அங்கு சென்று மரியாதை செலுத்தியுள்ளனர். ஆனால் இலங்கையின் சொந்த அரசுத் தலைவர்கள் அங்கு செல்லத் தயங்குவது எதைக் காட்டுகிறது? அது உண்மையை மறைக்கும் அரசியல் மனோபாவத்தையா? இல்லையெனில் தமிழ் மக்களின் உணர்வுகளை இன்னும் புறக்கணிக்கும் பழக்கத்தையா?**

**மக்கள் நினைவில் கொள்ளவேண்டியது – அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சி மட்டும் அல்ல; அது மனித உணர்வுகளையும் சேர்த்தே இருக்கவேண்டும். வடக்கு மக்களுக்கு நீதி வழங்கப்படாதபோது, காணாமற்போனவர்களின் உண்மை வெளிக்கொள்ளப்படாதபோது, புதைகுழிகள் திறம்பட விசாரணை செய்யப்படாதபோது, சாலைகள் அமைத்தலும், திட்டங்கள் தொடங்குதலும் முழுமையான அமைதியை அளிக்காது.**

**ஆகவே, அரசுத் தலைவர் அநுரகுமார தனது தவறை உணர்ந்து, எதிர்காலத்தில் செம்மணியை பார்வையிட வேண்டும். அது தமிழ் மக்களின் துயரத்தை மதிக்கும் அடையாளமாகவும், அரசு உண்மையை ஒளிக்காமல் எதிர்கொள்ளும் துணிச்சலாகவும் அமையும். இல்லையெனில், மக்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டோம் என்ற உணர்வில் மூழ்கிப்போவார்கள்.**

# மாகாண சபை வேண்டாம் என்பதுதான் இன்றும்கூட ஜேவிபியின் நிலைப்பாடா?

மாகாணசபைத் தேர்தலை நடத்தும் நோக்கம் ஆளும்தரப்புக்கு இல்லை. 1988, 1989களைப் போன்றே இப்போதும் மாகாணசபை முறைமை வேண்டாம் என்ற நிலைப்பாட்டில்தான் ஜே.வி.பி. இருக்கிறதா என்பதை தெளிவுபடுத்தவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் பதவியேற்று ஓரிரு வாரங்களில் ஓராண்டு நிறைவடையவுள்ளது. ஆகக் குறைந்தது ஒரு பாலம்கூட கட்டப்படாத காலகட்டமாகவே இது காணப்படுகிறது. வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் 25 சதவீதம்கூட பயன்படுத்தப்படவில்லை.

மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படவில்லை. சுமார் 9 ஆண்டுகளாக திட்டமிடப்பட்ட யாழ். மைதானத்துக்கே ஜனாதிபதி தற்போது அடிக்கல் நாட்டியிருக்கின்றார். இதற்கான நிதி இலங்கை கிரிக்கட் நிறுவனத்தினாலேயே ஒதுக்கப்படுகிறது. மாறாக ஆளும்தரப்பின் நிதி ஒதுக்கீட்டில் இந்த மைதானம் நிர்மாணிக்கப்படப் போவதில்லை.

இதுவரை எந்தவொரு வெளிநாட்டு முதலீடுகளும் கிடைக்கப் பெறவில்லை. அவ்வாறிருக்கையில் அபிவிருத்திகள் குறித்து கவனம் செலுத்தாமல் பொலிஸ் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரைக் கொண்டு எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் நடவடிக்கைகளில் மாத்திரமே அவதானம் செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இவை மக்களை ஏமாற்றுவதற்காக காண்பிக்கப்படும் பரப்புரையாகும். மறுபுறம் கம்பஹா பிரதேசத்தில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க மற்றும் பிரிதொரு நாடாளுமன்ற உறுப்பினருடன் சென்ற குழுவொன்று முன்னிலை சோசலிசக்கட்சியின் அலுவலகத்திலிருந்தோரைத் தாக்கியுள்ளது.

அவர்களைத் தாக்கிப் பலவந்தமாக அந்த அலுவலகத்தைக் கைப்பற்ற முயற்சித்துள்ளனர். அரசியல் ரீதியாக கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்ற போதிலும், அவ்வாறு கட்சி அலுவலகத்திலிருந்தோர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தற்போது ஜே.வி.பி. அதன் அடக்குமுறை சட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கிறது. மாகாணசபைத் தேர்தலை நடத்தும் நோக்கமும் இவர்களுக்கு இல்லை. 88, 89களைப் போன்றே இப்போதும் மாகாணசபை முறைமை வேண்டாம் என்ற நிலைப்பாட்டில் தான் ஜே.வி.பி. இருக்கிறதா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த விடயத்தில் இந்தியாவின் தலையீடோ அழுத்தமோ அவசியமல்ல. மக்களின் தேவைக்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். மாகாணசபைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆளும்தரப்புக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. வரலாற்றில் முதல் முறையாக வடக்கு மக்கள் இவ்வாறு மக்கள் ஆணையை வழங்கியிருக்கின்றனர்.

வரலாற்றில் வடக்கு மக்கள் கோரும் ஆகக் குறைந்த அதிகாரம் மாகாணசபைகளாகும். தமக்கு வாக்களித்த மக்களை கௌரவிக்கும் வகையில் அவர்களது எதிர்பார்ப்பினை நிறைவேற்றாமை கவலைக்குரியதாகும் என்றார்.

# எங்கள் கட்சி அலுவலகம் மீது தாக்குதல் நடத்தி ஆளும்தரப்பு தன் நிர்வாணத்தை வெளிப்படுத்தியது

## முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

தேசிய மக்கள் சக்தியினர் எவ்வாறு சட்டத்துக்கு கட்டுப்படுகிறார்கள் என்ற நிர்வாணம் எமது கட்சி காரியாலயம் மீது தாக்குதல் நடத்தியுள்ளதன் மூலம் வெளிப்பட்டுள்ளது என முன்னிலை சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்தார்.

முன்னிலை சோசலிசக் கட்சியின் கம்பஹா யக்கல பணியிடம் மீது நேற்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை ஆளும்கட்சியின் ஆதரவாளர்களே நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் புபுது ஜயகொட தெரிவித்ததாவது:

கம்பஹா மாவட்டத்தில் யக்கலவில் அமைந்துள்ள எமது கட்சி காரியாலயத்திற்குள் ஆளும்தரப்பைச் சேர்ந்தவர்கள், மக்கள் விடுதலை முன்னணியை சேர்ந்த பிரதி அமைச்சர்கள் சிலருடன் வந்தவர்கள் பலாத்காரமாக நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இவர்களின் தாக்குதலில் காயமடைந்த பெண் ஒருவர் உள்ளிட்ட 4 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் காரியாலயத்தை கடந்த 13 வருடங்களுக்கும் அதிக காலம் நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். இந்தக் காரியாலயம் அவர்களுக்குச் சொந்தமானது என்று தெரிவித்தே இவ்வாறு அங்கிருந்த எமது ஆதரவாளர்களை பலவந்தமாக வெளியேற்ற முயற்சித்தார்கள்.

இந்த காரியாலயம் அவர்களுக்கு உரித்துடையது என்றால், 13 வருடங்களாக அவர்கள் ஏன் இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தார்கள் என் கேட்கிறோம்.

இந்தகாரியாலயம் தொடர்பாக வழக்கொன்று இருப்பதாக அவர்கள் தெரிவிப்பதென்றால், நீதிமன்ற தீர்ப்பொன்றுடனே அவர்கள் இங்கு வந்திருக்க வேண்டும்.

இந்த நீதிமன்ற தீர்ப்பை நீதிமன்ற அதிகாரி ஒருவரே அறிவிக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் நீதிமன்ற உத்தரவொன்றை செயற்படுத்துவதற்கான அதிகாரம் விஜித்த ஹேரத்துக்கோ ரில்வின் சில்வாவுக்கோ வழங்கப்பட்டிருக்கிறதா என கேட்கிறா ம்.

அதனால் எமது கட்சி காரியாலயம் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் தேசிய மக்கள் சக்தியின் நிர்வாணம் வெளியாகியுள்ளது.

இவர்கள் எவ்வாறு சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்கிறார்கள், எவ்வாறு பொலிஸாரை பயன்படுத்தி செயற்படுகிறார்கள் என்பதை மக்களால் இப்போது நன்கு புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் என்றார்.

# கோட்டை தொடருந்து நிலையத்தை மறுசீரமைப்பது குறித்து ஆராய்வு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தை 1.3 பில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்ய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கான ஏலம் கோரப்பட்டுள்ளதாகவும், 15 மாதங்களுக்குள் திட்டத்தை நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்தத் திட்டம், கோட்டை புகையிரத நிலையத்தை மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கூடிய நவீன போக்குவரத்து மையமாக மாற்றும் எனவும், இந்த வருட இறுதிக்குள் வேலைத்திட்ட பணிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

## ஒரு கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலம்.

பின்னைய காலங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்சிற்கும் இடையில் ஏற்பட்ட இணக்கப்பாடுகளிலும் தென் கிழக்கில் முஸ்லீம் மக்களுக்கான ஒரு தனி அலகு என்பது மூன்று தெரிவுகளில் ஒன்றாக அமைந்திருந்தது. இந்த விடயத்திலேயும் தொடக்கத்திலிருந்தே இ.த.அ.கட்சியின் யாப்பின் விதி 2 இல் கட்சியின் நோக்கமாக 'ஒரு சுயாட்சித் தமிழ் அரசும், ஒரு சுயாட்சி முஸ்லீம் அரசும்' என்கிற அடிப்படை கோட்பாடு தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்துள்ளது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

1949 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரெஸ் கட்சியின் அடிப்படைக் கோட்பாடோடு முரண்பட்டு பிரிந்து சமஷ்டிக் கட்சியாக உருவெடுத்த இ.த.அ.கட்சி தொடர்ந்தும் தனது அடைப்படைக் கொள்கைக் கோட்பாட்டோடும் தந்தை செல்வாவின் அணுகுமுறையோடும் பயணிக்கிறது. வேறு கொள்கைகளைக் கொண்டிருந்த மற்றைய தமிழ்க் கட்சியினர் முக்கால் நூற்றாண்டுக்கு மேலான எமது கொள்கையை ஏற்று மாறுகிறபோது அவர்களையும் எங்களோடு இணைத்துப் பயணிப்பதில் நாம் பின்நிற்க மாட்டோம் என்பதை எமது கொள்கையையும் அணுகுமுறையையும் முதலாவது குடியரசு யாப்பு இயற்றப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் தர்மலிங்கம் விமிரமாக ஆற்றிய உரையை நினைவுபடுத்தும் இவ்வேளையில் தெளிவாக அறிவிக்கிறேன் என்றார்.

நிகழ்வில், வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஸ் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம், தர்மலிங்கத்தின் புதல்வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான கஜதீபன், சயந்தன், வலி, வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன், வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் நிரோஸ், யாழ். வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் யெசீதன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

## இலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பினருக்கு அனுப்பிவைத்திருக்கும் இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கை கடந்த 7 தசாப்த காலமாக தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பிலும், போர்க்குற்றங்களிலும், மனிதகுலத்துக்கு எதிரான மீறல்களிலும் ஈடுபட்டிருப்பதுடன் அதன் விளைவாக சுமார் பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் நாட்டைவிட்டு அகதிகளாகத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் ஐ.நா மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை உள்ளிட்டவற்றைத் தொடர்ந்தும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்கிறது. சாட்சியங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன.

அதுமாத்திரமன்றி பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய நீதி இன்னமும் நிலைநாட்டப்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச குற்றவியல் நீதிப்பொறிமுறையின் ஊடாக பொறுப்புக்கூறலை வலுப்படுத்தல், ஆக்கபூர்வமான முறையில் இழப்பீடுகளை வழங்கல், மீள்நிகழாமையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அரசமைப்பு மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல் ஆகிய 3 பிரதான விடயங்களை முன்னிறுத்தி உடனடிநடவடிக்கையைக் கோரும் வகையில் இம்மாதம் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய தீர்மானம் அமையவேண்டும்.

குறிப்பாக அண்மையில் யாழ். செம்மணியிலும், திருகோணமலையின் சம்பூரிலும், மன்னாரிலும் கண்டறியப்பட்டுள்ள மனிதப்புதைகுழிகளும், குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்குச் சொந்தமானவை உள்ளடங்கலாக அங்கு அடையாளங்காணப்பட்ட மனித எச்சங்களும் இலங்கை அரசின் இனப்படுகொலை நோக்கத்துக்கான வலுவான ஆதாரங்களாகக் காணப்படுகின்றன. எனவே ஐ.நா மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை 1948 தொடக்கம் இப்போது வரை நிகழ்த்தப்பட்ட சகல அட்டூழியங்கள் தொடர்பிலும் ஆதாரங்களை திரட்டும் வகையில் விரிவுபடுத்தப்படவேண்டும்.

அதேபோன்று இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் உடனடியாகப் பாரப்படுத்துவதற்கு அவசியமான வலுவான ஆதாரங்களுடன் கூடிய 15 - 20 முக்கிய வழக்குகளை அடையாளம் காணவேண்டும்.

அடுத்ததாக இலங்கை விவகாரத்தை சர்வதேச நீதிமன்றங்களுக்குப் பரிந்துரைத்தல், உலகளாவிய நீதிப்பொறிமுறையை நடைமுறைப்படுத்தல், இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிப்பொறிமுறையை ஒன்றை உருவாக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் ஐ.நா பொதுச்சபைக்குப் பரிந்துரைக்கப்படல் என்பவற்றுக்கான கூறுகள் புதிய தீர்மானத்தில் உள்ளடக்கப்படவேண்டும்.

அத்தோடு படையினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவித்தல், தமிழர் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல், மீள்குடியேற்றம், நிலையான வாழ்வாதாரம் உள்ளிட்ட நடவடிக்கைகளைத் திட்டமிட்டு முன்னெடுப்பதற்கு சர்வதேச அனுசரணையுடன் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், ஐ.நா. நிபுணர்கள் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் இடைக்கால உள்ளகக் கட்டமைப்பொன்று நிறுவப்படவேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## பாவனையற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமுர்த்திஅபிவிருத்தித்துறைத்தலைவர்களுக்கு இதுபோன்ற பயனற்ற செலவுகளைச் செய்யவோ, அங்கீகரிக்கவோ மற்றும் சான்றளிக்கவோ கூடாது என்று பரிந்துரைத்துள்ளது.

அதன்படி, இயங்கும் நிலையில் உள்ள வாகனங்கள் மட்டுமே 2025 முதல் காப்பீடு செய்யப்படும் என்று துறையின் கணக்கியல் அதிகாரி தணிக்கை அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், துறையின் பல வாகனங்களை தனியார் திருத்தகங்ளுக்கு அனுப்பியதால் துறைக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அறிக்கை கூறுகிறது.

அந்த வாகனங்களை விரைவில் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தணிக்கைத்துறை பரிந்துரைத்துள்ளது.

இந்தத் தகவல், சமுர்த்தி அபிவிருத்தித் துறையின் 2024 ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தணிக்கை ஆவணத்தில் உள்ளது. இந்த ஆண்டு அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## பாதாள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது.

கெஹெல் பத்ரா பத்மே, பாக்கோ சமந்தா மற்றும் தம்பாரிலஹிரு ஆகியோர் அவ்வப்போது வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி ஊடாக வழங்கும் கட்டளைகளுக்கு ஏற்ப, மித்தேனியாவைச் சேர்ந்த இந்த ஏழு பேரும் இலங்கைக்குள் போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டனர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் நேரடி மேற்பார்வையின் கீழும், மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான மூத்த துணைப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரத்னவின் அறிவுறுத்தலின் கீழும், மேற்கு மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் உதவிப் பொலிஸ் மா அதிபர் ரோஹன் ஒலுகல, பொறுப்பதிகாரி, தலைமைப் பொலிஸ் மா அதிபர் லிண்டன் டி சில்வா ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழும், இது தொடர்பான விசாரணைகளைத் தொடர ஒரு முக்கிய காவல்துறை குழு தென் மாகாணத்திற்குச் செல்கிறது.

# ஓய்வூதிய முரணைத் தீர்க்ககோரி கொழும்பில் நேற்றுப் போராட்டம்

2020- முதல் 2024 வரையான நான்கு ஆண்டுகளில் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள், தமது ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கக் கோரி நேற்றுக்காலை அரசுத்தலைவர் செயலகத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மற்றவர்களுடன் ஒப்பிடும்போது தமது ஓய்வூதியம் மிகக் குறைவாக இருப்பதாகப் போராட்டக்காரர்கள் கூறினர்.

'மாற்றாந்தாய்கவனிப்புளங்களுக்குவேண்டாம்' மற்றும் 'குப்பையில் வீசப்பட்டுள்ளோம்' போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொவிட் (COVID-19) பெருந்தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியின்போது முந்தைய ஆளும்தரப்புக்கள் அரசு ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கவில்லை என்றும், இந்தச் சூழ்நிலையால் தங்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள், 2025ஆம் ஆண்டு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வுடன் ஒப்பிடும்போது, தங்களுக்கு நியாயமான ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும் என்று கோரினர்.

போராட்டக்காரர்களின் தலைவர் விமலசூரியா பேசும்போது, ஆளும்தரப்பு வரவு செலவுத் திட்டத்தில் அரசு ஊழியர்களின் சம்பளத்தை அதிக அளவில் உயர்த்தியதற்கான காரணங்களைக் கருத்தில் கொண்டு, தமது ஓய்வூதியத்தையும் இதேபோல் அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

2020 முதல் 20-24 வரையான காலகட்டத்தில் எந்த அரசு ஊழியரின் சம்பளத்திலும் அதிகரிப்பு இல்லாததால், அந்த அரசு ஊழியர்கள் குறைந்த சம்பளத்தையே பெறுகிறார்கள் என்பதை ஆளும்தரப்பு ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குச் சம்பள உயர்வை வழங்கியதாகவும், அதே நீதியைத் தனது குழுவினருக்கும் வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தனது அணிக்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களின் சம்பளம் சுமார் 70 முதல்-80% வரை அதிகமாக இருப்பதாகவும் ஆச்சார்யசூரியா கூறினார். மற்ற ஓய்வூதியதாரர்களின் சம்பளத்துடன் சமமாக வழங்கக் கோரி இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாகவும், தான் வெற்றி பெறும்வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்றும் ஆச்சார்யசூரியா கூறினார்.

இந்த போராட்டம் காரணமாக, அரசுத் தலைவர் செயலகத்தைச் சுற்றி பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு, சாலையின் ஒரு வழிப்பாதை மூடப்பட்டது.



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.09.2025இல் வெளியிடப்பெற்றது